பள்ளிக்கு முழுமையாக சுற்றுச் சுவர் எழுப்புகிறபோது, அரசுக்கு கூடுதலான நிதிச் சுமை இருக்கிறது. தமிழகத்தில் இருக்கக்கூடிய பல பள்ளிகளுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆணைக்கிணங்க, பல ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளிலே தொடங்கி, இப்பொழுது கம்ப்யூட்டர்கள், டி.வி–க்கள் வழங்கக்கூடிய திட்டம் நடைமுறையிலே இருக்கக்கூடிய காரணத்தினால், பல பள்ளிகளிலிருந்தும் அவர்களுடைய பாதுகாப்பைக் கருதி, இத்தகைய சுற்றுச் சுவர்களை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறது. கூடுமானவரை, இத்தகைய பள்ளிகளுக்கெல்லாம் நபார்டு வங்கியினுடைய உதவியைப் பெற்று, அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. சில பள்ளிகளுக்கு நம்முடைய உறுப்பினர் அவர்களே குறிப்பிட்டதைப்போல, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலமாகவோ அல்லது அரசு இப்பொழுது அறிமுகப்படுத்தி இருக்கக்கூடிய Public-Private Partnership திட்டத்தின் அடிப்படையில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாகவோ இந்தப் பணிகளை மேற்கொண்டால், அது அரசுக்கு உதவியாக அமையும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

8—

சாலை வசதி

***30009—திரு. ஏ.கே. போஸ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, மூலக்கரை—விளாச்சேரி சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை—விருதுநகர் தேசிய நெடுஞ்சாலையில் முன்னாலேயும் அகலமாக இருக்கிறது, பின்னாலேயும் அகலமாக இருக்கிறது. மூலக்கரை என்கிற அந்த இடத்தில் குறுகலாக இருக்கிறது. அதற்கு எதிரில் மன்னர் கல்லூரி இருக்கிறது. அதற்கு அடுத்தாற்போல் சௌராஷ்டிரா கல்லூரி இருக்கிறது. ஆகவே, அங்கே நெருக்கடி அதிகமாக இருக்கிற காரணத்தினால், அதை இதுவரையிலும் விரிவுபடுத்த முடியாத ஒரு காரணம் இருக்கிறது. அந்தக் காரணத்திற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதிலிலே, 'ஆம்' என்று குறிப்பிட்டேன். பசுமலை—திருநகர் சாலை என்பது ஒரு மாவட்ட இதர சாலை. இது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தேசிய நெடுஞ்சாலை எண் 7—லிருந்து வலதுபுறமாகத் திரும்பி பல கிராமங்களை இணைக்கிறது. இந்தச் சாலையினுடைய மொத்த நீளம் சுமார் 3.6 கிலோ மீட்டர். இதிலே ஏற்கெனவே ஒரு கிலோ மீட்டர் சாலை இடைவெளித் தடமாக, அதாவது 5.5 மீட்டர் அகலம் கொண்டதாக இருக்கிறது. மீதம் இருக்கக்கூடிய 2.6 கிலோ மீட்டர் சாலையானது ஒரு வழித் தடமாக, அதாவது 3.75 மீட்டர் அகலம் கொண்டதாக இருக்கிறது. எனவே, இந்த ஆண்டு, ஒருங்கிணைந்த சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் சுமார் 90 இலட்சம் ரூபாய் மதிப்பில், 3 பைப் கல்வெர்ட்டுகள் உட்பட இந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு அரசு திட்டமிட்டு, மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளியும் கோரி, பணி தொடங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ்.

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலையிலே இன்றைக்கு ஏழை எளியோர்கள், குடிசை போட்டுக்கொண்டிருப்பவர்களையெல்லாம் கேட்காமல், குடிசைகளை இடித்துத் தள்ளிவிட்டு, சாலைகளை அமைக்கிறார்கள். ஆனால், அந்த இடத்தில் ஒரு முக்கியப் பிரமுகர் பங்களா கட்டி, முன்னால் தோட்டம் அமைத்து, பூச்செடி வைத்து, வரும்பொழுதெல்லாம் அந்த இடத்தில்

[2008 நவம்பர் 11

சாலையை விரிவுபடுத்தவிடாமல் செய்துகொண்டிருக்கிறார். அதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதில் நடவடிக்கை எடுத்து, அந்த மூலக்கரை என்ற இடத்திலே, மன்னர் கல்லூரிக்கு எதிரிலேயும், சௌராஷ்டிரா கல்லூரிக்குப் போகக்கூடிய வழியிலேயும், விளாச்சேரிக்கு போகக்கூடிய வழியிலும் அதை விரிவுபடுத்தினால், மக்களுக்கு வசதியாக இருக்கும். சாலை விபத்து நேரிடுவதைத் தடுப்பதாக இருக்கும் என்பதை மிக்க பணிவன்போடு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த ஆக்கிரமிப்பை அகற்றி, சாலை வசதியை சீக்கிரத்திலே செய்து கொடுக்க வேண்டுமென்று அமைச்சரை உங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற தேசிய நெடுஞ்சாலை, தேசிய நெடுஞ்சாலை எண் 7 ஆகும். இது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பராமரிப்பிலே இருக்கிறது. இந்தச் சாலையை இப்பொழுது நான்கு வழிச் சாலையாக மாற்றுகிற பணி நடந்து வருகிறது. எனவே, அதுபோன்ற ஆக்கிரமிப்பு இந்திய தேசிய நெடுஞ்சாலையில் இருக்குமானால், இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு இந்த அரசு தெரிவித்து, அதற்குரிய நடவடிக்கையை எடுக்கும். அதுபோல, மாவட்ட இதர சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள், மாநில நெடுஞ்சாலைகளில் இருக்குமானால், நம்முடைய மாநில நெடுஞ்சாலைத் துறை ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். ஆக்கிரமிப்பை அகற்றுவதிலே எந்த பாரபட்சமும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்ததில்லை; இருக்கப் போவதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

முற்பகல் 10—40

திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடுதுறையிலிருந்து மயிலாடுதுறை வரை சாலையை அகலப்படுத்த இந்த அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி வினா எழுப்பவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

உதவித் தொகை

*20841—திரு. சி. கோவிந்தசாமி:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமண உதவித் தொகை, மகப்பேறு நிதியுதவித் திட்டங்களில் பயன்பெற நகர்ப்புற ஆண்டு வருமான உச்சவரம்புத் தொகையை ரூ.30,000/— ஆக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருமண உதவித் திட்டங்களின்கீழ் பயன்பெற ஆண்டு வருமான உச்ச வரம்பை ரூ.24,000/— ஆக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆணை வெளியிட்டுள்ளார்கள். அதுபோல, மகப்பேறு உதவித் தொகை பெற வருமானச் சான்று தேவையில்லை என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு முன்னாலே எழுப்பிய கேள்வி இது. இப்போது மகப்பேறு உதவித் திட்டத்திற்கு வருமான வரம்பு தேவையில்லை என்று நீக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒரு நல்ல நிகழ்வு. நான் இங்கே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புவது, திருமண உதவித் திட்டத்திற்கான உதவியும், மகப்பேறு நிதி உதவியும் உரிய காலத்தில் கிடைக்காத ஒரு குறை என்பது தொடர்ந்து நீடிக்கிறது. நான்